REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 25௳ சனி (10—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 26௳ ஞாயிறு (11—9—55) [இதழ் 76

டையூ பாகிஸ்தான் வசமாகும்?

இந்தியா விதித்திருக்கிற தடைகளின் விளைவாக எழுந்துள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்கு பாகிஸ்தான் செய்து வரும் உதவிக்குப் பிரதியாக, கோவா சர்க்கார், டையூ பகுதியை பாகிஸ்தானுக்குத் தந்துவிட எண்ணுகின்றனராம்!

டையூவை தொடர்ந்து காப்பாற்ற போர்ச்சுகீசியர்கள் எண்ணவில்லை என்றும், அங்குள்ள சர்க்கார் கஜானவை கோவா தலைநகரான பஞ்சிம் என்ற இடத்திற்கு மாற்றிவிட்டதாகவும் கூறப்படுகிறதாம். டையூ பற்றி 'பேரம்' பேசுவதற்காக, பாகிஸ்தான் சர்க்கார் பிரதிநிதிகள் சிலர் அண்மையில் டாமன் வந்து போனதாகவும் கூறப்படுகிறது.

'போதன மொழியாக இந்தி ஏன் இருக்க வேண்டும்?'

'இந்தி மொழி தேசீய மொழி அல்ல!'

'முப்பது ஆண்டுகளுக்குப் பின்பே அது அலுவல் மொழியாகலாம்'

சென்னை பல்கலைக் கழகம் தாக்குதல்

சென்னை, செப். 9—

"இந்தியப் பேரரசு, இந்திமொழியை, குறிப்பாகத் தென்னுட்டு மக்கள் மீதும்—பொதுவாக இந்தி பேசாத இதர மக்கள் மீதும் திணிப்பதற்காக வேகவேகமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நாட்டில், நாளுக்கு நாள் கண்டனம் வளர்ந்து வருகிறது.

"1965-ம் ஆண்டிலிருந்து பரீட்சைகள் இந்தியில்தான் நடைபெற வேண்டும்; இந்தியாவில் உள்ள பள்ளிகள் பல்கலைக் கழகங்கள், மற்றும் எதிர் காலத்தில் போட்டிப் பரீட்சை எழுது வர்கள் எல்லோரும் இந்தி மொழியையே போதன மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்—என்று மத்திய உள்நாட்டிலாகா சென்னை பல்கலைக்கழகத்திற்குபல்கலைக் கழகங்களின் 'போர்டு' மூலம் அனுப்பியிருந்த சுற்றறிக்கையில் காணப்படுகிறது. அந்த சுற்றறிக்கை பற்றி தனது கருத்தைத் தெரிவிக்கும்போது, சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்' பெரும் 'தாக்குதலை' நடத்தியிருக்கிறது.

"பல்கலைக்கழகங்களிலும், பள்ளிகளிலும் இந்தியைப் போதனமொழியாக ஏற்க வேண்டுமென்ற கருத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை;

"இந்தி, இந்தியாவின் அலுவல் மொழியாக இருப்பதாலேயே, பல்கலைக்கழ்கங்களிலிருந்து சாதாரண பள்ளிகள்வரை இந்தி மொழியை போதன மொழியாக ஆக்கவேண்டிய அவசியம் என்னவந்தது?

"இப்போதுள்ள சந்தர்ப்பத்தில், இந்தி பேசாத—இந்தியைத் தாய்மொழியாகக்கொள்ளாத மாணவர்கள் தங்களின் ஆரம்பகால பள்ளி வகுப்புக்களிலிருந்தே இந்தியைப் போதன மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென விதிப்பது முரண்பட்ட ஒன்றாகும்;

"அரசியல் சட்டத்தில், இந்தி மொழி இந்தியாவின் தேசீய மொழி என்று குறிக்கப்படவில்லை;

"அரசியல் சட்டம் அங்கீகரித்திருக்கிற பதினன்கு மொழிகளும் தேசீய மொழிகளாகவே கருதப்பட வேண்டும்; இவற்றுள் ஒன்றை மத்திய சர்க்கார் தனது அலுவல் மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறது;

"இவற்றுள் ஒரு மொழி, நாடு முழுவதுக்குமான போதன மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறுவது, எல்லா மொழிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கும் சமசந்தர்ப்பம், பாதுகாப்புடையதாக இருக்கமுடியாது;

"மேலும், இப்போதுள்ள நிலைகளில் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிற மொழிகள் எல்லாம் பல்கலைக் கழகங்களில் போதன மொழியாக்குவதற்கும், போதுமான அறிவைப் பெற்று, மேலும் அதனை வளர்த்துக்கொள்வதற்குமான அளவு வளர்ந்திருக்கின்றன—முன்னேறியிருக்கின்றன என்று கூறமுடியாது,"

என்றெல்லாம் சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்' இடித்துரைத்திருக்கிறது.

"மேலும், இந்திய சர்க்கார் அலுவல்களுக்குக்கூட, ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி மொழியை ஏற்றுக்கொள்வதற்கு அரசியல் சட்டம் குறிப்பிடுகிற 15 ஆண்டு காலம் போதுமானதல்ல—இன்னும் 15 ஆண்டுகள் அதிகமாகத் தவணை தந்து, பின்னரே ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியில் அலுவல்களை மேற்கொள்ளலாம்,"

என்றும், 'சிண்டிகேட்' தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

பர்மா அரிசி இறக்குமதி

நடப்பு ஆண்டில், 2,65,000 டன் அரிசி பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாம்; இந்தியாவில் பர்மா அரிசி மணங்குக்கு ரூ. 11—8—0 முதல் ரூ. 15—8—0 வரை விற்கப்படுகிறதாம்.

கரூர் மில் தொழிலாளர்கள்

உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

2—9—55 முதல் கரூர் மில் தொழிலாளர்கள், நிர்வாகிகளின் சட்ட விரோதமான 'சஸ்பெண்ட்', 'டிஸ்மிஸ்' போன்ற நடவடிக்கைகளை எதிர்த்து, உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வருகின்றனராம்

20,000 துருப்புக்களைக் குறைக்க முடிவு

உலக நாடுகளிடையே நல்லுறவு ஏற்படுவதற்காக ஹங்கேரிய சர்க்காரும் தன் இராணுவத்தில் 20,000 துருப்புக்களைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாம்.

விமானப் போக்குவரத்து: வளர்ந்துவரும் நஷ்ட அளவு

புதுடில்லி, செப். 9—

"இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனம் இலாபகரமாக நடைபெறவில்லை என்பது மட்டுமின்றி, தேசிய மயமாக்கப்பட்டபோது ஏராளமான தொகை நஷ்டஈடாக அளவு மீறித் தரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது;

"1951 மார்ச் 31-ந் தேதி முடிய ரூ. 80 இலட்சம்; 1955 மார்ச் முடிய ரூ. 115 - இலட்சம் — என்று நஷ்டம் வளர்ந்துகொண்டே செல்கிறது; இந்த ஆண்டு ரூ 190 - இலட்சம் நஷ்டம் ஏற்படலாம் என மதிப்பிடப்படுகிறது.

"மேலும் நான்கு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட — ஆனல், 'டகோடா' விமானத்தைக் காட்டிலும் குறைவான பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய 'ஹெரான்' விமானங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன; இதனல் வேறு நஷ்டம் வளரவிருக்கிறது.

"மேலும், நிறுவனம் இப்போது ரூ. 133 இலட்சம் கடன் வேறுபட்டிருக்கிறது; எனவே இந்த நிலைகளில் தேசிய மயமாக்கப்பட்ட இந்த விமானப் போக்குவரத்து குறித்து முழுவதுமாக விசாரணை செய்ய ஒரு உயர்ந்த அதிகாரம் படைத்த குழு நியமிக்கவேண்டும்,"

என்று, ஐதராபாத் ம. சோ. கட்சியைச் சேர்ந்த ஷின்சந்த் என்ற உறுப்பினர் ராஜ்யசபையில் கோரியிருக்கிறர்.

வர்த்தக பேர ஊழல்கள்

நீதிமுறை விசாரணை நடத்த பொதுக்கணக்கு குழு வற்புறுத்தல்

புதுடில்லி, செப். 9—

"இங்கிலாந்தில் ஜீப் கார்கள் வாங்கியதில் நடைபெற்ற ஊழல், ஒரு ஐரோப்பிய நாட்டில் வெடிமருந்துகள் வாங்கியதில் ஏற்பட்ட ஊழல் ஆகியவற்றை விசாரிப்பதற்காக, ஒரு நீதிமுறையான விசாரணை நடத்தவேண்டும் என்று ஏற்கனவே தெரிவித்துள்ள யோசனையை மாற்றிக் கொள்வதற்கில்லை,"

என்று, பொதுக்கணக்குக் குழு தனது பதினன்காவது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

மக்கள் சபையில் தாக்கலாகியுள்ள அந்த அறிக்கையில், மேலும் நடைபெற்றுள்ள பல ஊழல்கள் குறித்துத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

"பெருந்தொகை ஈடுபடுத்தப்படுகிற பேரங்களில் சாதாரணமாகக் கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கையான நடைமுறைகளைக்கூட இந்திய அதிகாரிகள் மேற்கொள்ளாதது மிகவும் வருந்தத் தக்கதாகும்," என்றும் குழு தெரிவித்திருக்கிறது.

"பாதுகாப்பு இலாகா, இயந்திர உபகரணத் தொழிற்சாலை ஒன்றை, நடைமுறை நிலையைப் புரிந்துகொள்ளாமல் துவக்கி, அதை மிக மட்ட ரகமாக நிர்மாணித்து பல இலட்சம் ரூபாயைப் பாழ்படுத்தியிருக்கிறது," என்றும் குழு, 'சர்டிபிகேட்' தந்திருக்கிறது.

"லண்டனில் உள்ள இந்திய சப்ளை இலாகா அதிகாரிகள், வாங்கிய சாமான்களை, கப்பல் ஏற்றுமுன் சரிவர பரிசோதிக்காமலிருக்கும் தவறினைத் தொடர்ந்து திரும்பத் திரும்பச் செய்து வருகின்றனர்; மிக அடிப்படையான அத்தகு கடமைகளைக்கூடச் செய்யாது, மிக அலட்சியமாக நடந்து கொள்ளும் அதிகாரிகள் மீது சர்க்கார் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகளைக் காட்டிலும், கடினமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,"

என்று, குழு யோசனை தெரிவித்திருக்கிறது.

'பணித் தேர்வு மொழியாக இந்தியுடன் ஆங்கிலமும் இருக்க வேண்டும்'

'இன்றேல் தென்னுட்டவர் நலன் பாழாகும்'

இந்திக் குழுவிற்கு சென்னை பல்கலைக் கழகம் கூறு

சென்னை, செப். 9—

"ஆங்கிலத்திற்குப்பதிலாக இந்தி மொழியைப் புகுத்துவது, இந்தி மொழியின் வரிவடிவமே தெரியாத தென்னுடு போன்ற இந்தி பேசாத பகுதி மக்களுக்கு மிகக் கொடூரமான பிரதிகூலமாக அமையும்;

"பொதுப் பணித் தேர்வுகளைப் பொறுத்த வரையில், வேறு ஒரு வட்டார மொழி, ஆங்கிலத்திற்குப் பதிலாக—கல்வி கற்பதற்குரிய மொழியாக வளருகிறவரையில், ஆங்கிலமும் இந்தியுடன் இணைந்தே தேர்வு மொழியாக—அலுவல் மொழியாக இருந்தாலன்றி, பொதுப் பணிகளைப் பொறுத்த வரையில், இந்தி பேசாத மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும், நலன்களுக்கும் பாதுகாப்பு இருக்க முடியாது,"

என்று, அலுவல் மொழிக் குழுவினரின் கேள்விகளுக்கு சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்' தந்துள்ள பதில்கள் கூறுகின்றன.

15 ஆண்டுகளுக்குள் இந்தி மொழியை அலுவல் மொழியாக—பணித் தேர்வு மொழியாக ஆக்கிவிட வேண்டும் என்ற வடநாட்டவரின் பேராசைக்குப் பேரடியாக, பதில் அமைந்திருக்கிறது!

காமராசர் நம்பிக்கை

சென்னை, செப். 9—

சென்னையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவப்படலாம் என தாம் நம்புவதாக டில்லியிலிருந்து சென்னை திரும்பியுள்ள முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறர்.

"பம்பாயிலும், கல்கத்தாவிலும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அத்தகு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுவிட்டன; இரண்டாம் திட்டப்படியும் மேலும் சில தொழிற்சாலைகள் நிறுவப்பட இருக்கின்றன; அவற்றுள் ஒன்றை சென்னையில் நிறுவுமாறு கேட்டிருக்கிறேன்; எனது யோசனைக்கு திட்டக் குழுவினர் ஆதரவு தருவர் என்று நம்புகிறேன்,"

என்று அவர் தெரிவித்திருக்கிறர். எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி பேசப்பட்டபோது இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன் விசாகப்பட்டினத்துடன் எண்ணூரும் சிபாரிசு செய்யப்பட்டது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—9—'55 சனி

மற்றொரு தோல்வி!

'இலங்கை இந்தியர் பிரச்சினையில் இப்போது வளர்ந்துள்ள நிலைகள் பற்றி நான் ஏற்கனவே வருத்தம் தெரிவித்திருக்கிறேன்;

'இலங்கை இந்தியர் பிரச்சினை, பரிகாரம் தேட முடியாததாகிவிட்டது;

'இந்தப் பிரச்சினை இந்தியக் குடி உரிமை பற்றியதோ, அல்லது இந்தியக் குடி மக்களைப் பற்றியதோ அல்ல; மாறாக, எப்போதும் இந்தியக் குடி மக்களாயிராத, அல்லது இந்தியக் குடி மக்களாயிருப்பதை அறவே விட்டுவிட்ட இந்திய வம்சா வழியினரின் பிரச்சினையாகும்;

'அவர்கள் எல்லாம், இலங்கைக் குடி மக்களாக ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், அவர்கள் 'நாடற்றவர்'களாகின்றனர்;

'அவர்கள் எல்லாம் இலங்கைக் குடி மக்களல்லர்—என்று, இலங்கை கூறிவிடுவதினாலேயோ, அவர்கள் வெளியேற்றப்பட்டாலோ, இந்தியா அவர்களை எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதல்ல பொருள்;

'அடிப்படையில், பிரச்சினை, இலங்கை சர்க்காருக்கும்—இலங்கை இந்தியருக்கும் இடையே உள்ள ஒன்றாகும்;

'நாம் நட்புறவு நோக்குடன் தான் அந்தப் பிரச்சினையில் தலையிடுகிறோம்; அதனால், அவர்கள் இந்தியக் குடி மக்களாகிவிடமாட்டார்கள்;

'இலங்கை சர்க்கார், இலங்கை வாழ் இந்தியர்களுடன் நேரடியாகவே பேசி பிரச்சினைக்குப் பரிகாரம் தேடிக்கொண்டால் நல்லது; நாங்கள் மகிழ்வோம்—என்று இலங்கை சர்க்காருக்கு அண்மையில் தெரிவித்துவிட்டோம்;

'அவர்கள் இரு சாராருக்கும் நாம் உதவுவோம்; ஆனால், தங்களுக்கென, இயக்கங்கள் தொழிற் சங்கங்கள் ஆகியவை கொண்டுள்ள அந்த மக்களின் கருத்துக்களுக்கு மாறாக, நாம் நடந்துகொள்ள முடியாது,'

என்றெல்லாம், பிரதமர் பண்டித நேரு, மூன்று நாட்களுக்கு முன்பு ராஜ்யங்கள் சபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

'பிரச்சினை நம்முடையதல்ல—இலங்கைவாழ் இந்தியர்களுடையது; அவர்கள் நேரடியாக இலங்கை சர்க்காருடன் பேசி, பிரச்சினைக்குப் பரிகாரம் தேடலாம்,' என்று பிரதமர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இலங்கை இந்தியர்களின் எதிர்கால நிர்ணயம் பற்றிய பிரச்சினை தலைதூக்கி, இன்று சுமார் எட்டு ஆண்டுகளாகின்றன; டட்லி சேனநாயகா இலங்கையின் பிரதம மந்திரியாயிருந்த காலத்தில் பிரச்சினை வலுத்தது; கொத்தலாவலை காலத்தில், பிரச்சினை, நெருக்கடிக் கட்டத்தை அடைந்தது.

இந்த எட்டு ஆண்டு காலமாக, இலங்கை இந்தியரின் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காணுவதில் பற்பல சிக்கல்கள், முட்டுக்கட்டைகள் இருந்துவந்திருக்கின்றன; பிரச்சினை நெருக்கடியான காலத்தில், பிரச்சினையின் பரிகாரத்திற்கென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நாம், அவ்வப்போது இங்கு நமது கருத்தை அறிவித்து வந்திருக்கிறோம்.

இலங்கைவாழ் திராவிடர் பிரச்சினைக்கு முடிவு காணுவதில் இந்தியப் பேரரசு போதுமான அக்கரை காட்டவில்லை என்பது, இன்றைக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எடுத்துக் காட்டப்பட்ட ஒன்றாகும்.

இலங்கையில் குடி உரிமை மறுக்கப்படும் திராவிடர்களின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை இந்திய சர்க்காருக்குத் துளியும் இருந்தது என்பதற்கு ஆதாரமே இல்லை என்பதை இந்திய சர்க்காரின் இது பற்றிய நடவடிக்கைகள்பற்றி நாம் கருத்தறிவிக்கையில் தெளிவாக எடுத்துக் கூறிவந்திருக்கிறோம்.

பிரதமர் நேருவின் தலைமையில் உள்ள இந்தியப் பேரரசு, இலங்கை 'இந்தியர்' பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முனைந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இப்போது, 'இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவது முடியாததாகிவிட்டது,' என்று தெரிவிக்கிறது.

'இலங்கையில் வாழும் இந்தியர்களுக்கும்—இலங்கை சர்க்காருக்கும் மட்டுமே இந்தப் பிரச்சினை உரியது' என்றால், இந்திய சர்க்காரின் சார்பில் பிரதமர் நேரு இலங்கை ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஒப்பந்தங்கள் மேற்கொண்டு காரியங்களில் ஈடுபட்டிருக்கத் தேவையே இல்லையே?

'இந்திய சர்க்கார், பிரச்சினையில் தலையிட்டதற்கு நட்புறவு மனப்போக்குத்தான் காரணம்' என்று பண்டிதர் கூறியிருப்பது, முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று, பண்டிதரின் சமீபத்திய ஞானோதயத்தைக் காணும் இலங்கை இந்தியரில் ஒரு பகுதியினர் கருதுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இலங்கை திராவிடரின் குடி உரிமை பெறும் பிரச்சினையில் இந்திய சர்க்கார் தலையிட்டது 'நட்புறவு நோக்குடன்' தான்—என்ற பண்டிதரின் வாசகம், இதுவரை அவர் இலங்கைப் பிரச்சினையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் 'வெறும் கண் துடைப்பு' என்பதைச் சொல்கின்றது என்றும், இலங்கை 'இந்திய'ரில் மற்றொரு பகுதியினர் நினைப்பதில் தவறு இருக்க முடியாது.

எப்படியோ, பண்டித நேரு பேசியிருப்பதை திரும்பத் திரும்பப் படித்தால் கிடைக்கக்கூடிய பொருள் "பல முறை, பல வழிகளில் முயற்சித்தேன் - முடியவில்லை; கடினமாக இருக்கிறது; என்னால் ஆகவில்லை; நான் தலையிட்டது, நண்பர்கள் என்ற முறையில் தானே தவிர, இலங்கைவாழ் இந்தியர் மீது எனக்கு ஒன்றும் அத்தனை அக்கரை இல்லை; எனக்கு எப்படி அக்கரை ஏற்படும்? 'இந்தியர்'கள் என்று பெயர் இருந்தாலும் அவர்கள் எல்லாம் எம்மவரல்லர்; அவர்கள் திராவிடர்கள்; எக்கேடு கெட்டால் எனக்கு என்ன?" என்பதாய்த்தான் இருக்க முடியும் என்றும், இலங்கை இந்தியரில் சிலர் கூறுவது இயல்புதான்.

எப்படியோ, இலங்கை இந்தியர் பிரச்சினைக்கு, பெரும் 'புகழ்' பெற்று விளங்கும் பெரிய மனிதர் பண்டிதரால்—அவரது 'அகில உலகச் செல்வாக்கி'னால் பரிகாரம் தேட முடியவில்லை என்பது மட்டும் இப்போது மேலும் தெளிவாகத் தெரிகிறது.

பிரதமர் நேருவுடையவும், அவரது சர்க்காருடையவும் ஆற்றலின்மையைத்தான், தோல்விப் படலத்தின் மற்றொரு அத்தியாயமான — இலங்கை இந்தியர் பிரச்சினைக்கு மேற்கொண்ட முயற்சி சொல்கிறது!

புதியவரிகள்

அடுத்த ஐந்தாண்டில் சென்னை நிலைமை

தற்போதுள்ள வரிகள் மூலமே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 34 கோடி உபரி காண முடியுமென சென்னை நம்புகிறதாம்.

அதிகப்படி வரிகள் மூலம் ரூ. 13¼ கோடி வருவாய் எழுப்புவதாக சென்னை தெரிவித்துள்ளதாம்.

புதிய வரிகள் மூலம் பல்வேறு இனங்களிலும் சென்னை சர்க்கார் எழுப்ப உத்தேசித்துள்ள வருவாய்கள் பற்றிய விவரம் வருமாறு:—

நிலவரி: ரூ. 4½ கோடி.

விவசாய நிலங்கள் அல்லாத நிலங்களுக்கு வரி விதிப்பு மூலம்: ரூ. 1 கோடி.

விவசாய வருமான வரி: ரூ. 2½ கோடி.

அபிவிருத்தி வரி: ரூ. 1¼ கோடி.

மோட்டார் ஸ்பிரிட் விற்பனை வரி: ரூ. 1 கோடி.

மின்சார வரிகள்: ரூ. 3 கோடி.

நடுத்தர ரக பருத்தித் துணிகளுக்கு விசேட வரி விதிப்பதன் மூலம் ரூ. 2 கோடி எழுப்ப சென்னை உத்தேசித்துள்ளதாம்.

ஆனால், இதற்கு மத்திய சர்க்கார் இதுவரை சம்மதிக்காததால் இவ்வருமானம் கணக்கில் சேர்க்கப்படவில்லையாம்.

சேரி ஒழிப்புத் திட்டம்

சென்னை சர்க்கார் மானியம்

சென்னை நகரில் சேரிகள் ஒழிப்புக்காக 1951—52-லும், 1954—55-லும் நகர சபையினர் மேற்கொண்ட திட்டச் செலவுகளுக்காக ரூ. 6,61,249 மானியமாக அளிப்பதற்கு சென்னை சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்.

'தட்சிணப் பிரதேசம்' அமைக்க காங்கிரசார் ஆதரவு?

மாநில புனரமைப்புக் குழுவிடம் தமிழ்நாடு மக்கள் சபை உறுப்பினர்கள் முறையிடுவராம்

புதுடில்லி, செப். 8—

"சென்னை, திரு—கோச்சி, மைசூர் ஆகிய மாநிலங்களை ஒன்றாக இணைத்து ஒரு 'தட்சிணப் பிரதேச மாநிலம்' அமைக்க வேண்டும்,"

என்று, தமிழ்நாட்டைச் சேர்ந்த சில காங்கிரஸ் மக்கள்சபை உறுப்பினர்கள், மாநில புனரமைப்புக் குழு தன் அறிக்கையைத் தயாரித்துத் தாக்கல் செய்யுமுன்னரே, குழுவிடம் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்க விரும்புகின்றனராம்; அதற்கான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனராம்.

தமிழ்நாடு, கேரள பகுதிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகளிடை இந்த யோசனைக்கு ஆதரவு இருக்கிறது என்றாலும், கர்நாடக அரசியல்வாதிகள் தங்களுக்கென ஒரு தனி மாநிலம் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதில் அதிக அக்கரை காட்டிவருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்த வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள்சபை உறுப்பினர்கள் எல்லாரும் மாநாடு ஒன்றுகூடி விவாதிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றனவாம்.

இந்த யோசனையின் அடிப்படை எல்லாம் பொருளாதார நலன் தான் என்றும், தனித்தனி மாநிலங்களாக இருப்பதினால் ஏற்படும் நஷ்டங்கள் தவிர்க்கப்பட்டு, ஒரே மாநிலமாக இணைவதினால் எல்லோரும் நலன்பெற முடியும் என்றும் உறுப்பினர்கள் கருதுகின்றனராம்.

'மொழிப் பிரச்சினை, இந்த மூன்று மாநிலங்களும் ஒன்றாக இணைவதில் கஷ்டங்களைத் தரக்கூடும்,' என்று அவர்கள் நம்பவில்லை என்று தெரிகிறது.

புதிய 'தட்சிணப் பிரதேச மாநிலம்' மூன்று மொழி பேசும் மாநிலமாக இயங்கும் என்றும், உள்ள சட்ட சபையில் மூன்று மொழிகளும் பேசப்படும் என்றும் கூறுகின்றனர்.

இதற்கு உதாரணமாக, சுவிட்சர்லாந்து நாட்டு பெடரல் சர்க்காரில் நான்கு மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனராம்.

மேலும், அப்படி ஒரு, 'தட்சிணப் பிரதேசம்' அமைவது, 'மத்திய சர்க்கார், மத்திய சட்டசபையில் முக்கியமான தேசிய மொழிகளை உபயோகிக்க வேண்டும் என்று எடுத்துக்காட்டுவதற்கு நல்லதொரு முன்மாதிரியாக அமையும்,' என்றும் தெரிவிக்கின்றனர்.

பிரதமர் அறிவிக்கும் 'சேத'க் கணக்கு!

புதுடில்லி, செப். 8—

மக்கள் சபையில், பிரதமர் நேரு, வடகிழக்கு எல்லைப் பிரதேசத்தில் நாகமலை சாதியினருக்கும்—அசாம் படையினருக்குமிடையே நடைபெற்ற மோதுதலில் ஏற்பட்ட 'சேத'க் கணக்கைத் தெரிவித்துள்ளார்:—

உயிரிழந்தோர் தொகை	36
காயமடைந்தோர் தொகை	22
இவர்களில் சர்க்கார் தரப்பில் இறந்தவர்கள்	10
கிராமவாசிகள்	12
நாகர்கள்	14

சுய நிர்ணய உரிமை பெற போராட்டம்

சைப்ரஸ் பிரச்சினையில் கலக நிலைமை?

போர்க் கப்பல் விரைகிறதாம்!

கிரேக்க நாட்டிற்கு அருகேயுள்ள சைப்ரஸ் தீவு, பிரிட்டிஷ் ஆட்சியில் இருக்கிறது.

'கிரீசுடன் சைப்ரஸ் இணைந்தே தீர வேண்டும்' என்று கிரீஸ் நாட்டு மக்கள் கோருகின்றனர்.

கிரீஸ் மக்களின் இந்தக் கோரிக்கையை எதிர்த்து 'சைப்ரஸ் துருக்கியைச் சேர்ந்ததே' என்று முழக்கமிட்டு, கிரேக்கர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் துருக்கிப் பகுதி மக்கள் ஈடுபட்டனர்; இஸ்தான்புல்லிலும், இச்மீரிலும் உள்ள கிரேக்கர்களின் சொத்துக்கள் பெரும் அளவில் சேதமுற்றன;

இதன் விளைவாக அங்கு இராணுவப் பிரகடனம் அமுலாயிற்று; லண்டனில் நடைபெற்ற முக்கூட்டுப் பேச்சுவார்த்தை நின்றது.

"சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்காக இறுதிவரை போராடியே தீருவோம்,"

என்று, 20,000 கிரேக்கர்களடங்கிய பிரார்த்தனைக் கூட்டத்தில், சைப்ரஸ் ஆர்ச் பிஷப் முழக்கமிட்டுள்ளார்.

சைப்ரஸ் பற்றி லண்டனில் நடைபெற்ற முக்கூட்டு மாநாட்டின் தோல்விக்கு துருக்கியின் பிடிவாதமே காரணமென்று கிரீசின் ஐ. நா. நிரந்தரப் பிரதிநிதி கூறினார்; செப். 20-ல் ஐ. நா. பொது அசெம்பிளி கூடும்போது, இது பற்றிய அடுத்த நடவடிக்கை வெளிப்படும் என்றார்.

இதற்கிடையே, லண்டனிலிருந்து ஒரு பிரிட்டிஷ் போர்க் கப்பலும், கண்ணி அகற்றும் கப்பல்களின் படை ஒன்றும் சைப்ரசுக்குப் புறப்பட்டுள்ளன, கள்ளத்தனமாக ஆயுதங்கள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்கே இந்த ஏற்பாடாம்!

ரூ. 4½ கோடி விலையுள்ள அணு உலை.....!

இந்தியா ஏற்குமா?

ஒட்டாவா, செப். 8—

கொழும்புத் திட்டத்தின் கீழ், ரூ. 4½ கோடி விலையுள்ள அணு உலை ஒன்றை இந்தியாவுக்குத் தருவதற்கு கானடா முன்வந்துள்ளதாம்.

கானடாவின் கோரிக்கையை இந்தியா இதுவரையில் ஏற்கவில்லையென்றும், ஏற்குமென்று தாம் நம்புவதாகவும் கானடா வர்த்தக மந்திரி அறிவித்துள்ளார்.

மாநிலங்களுக்கிடை விற்பனை வரி

மத்திய ஆட்சி மசோதா உருவாகும்?

புதுடில்லி, செப். 8—

பருத்தி, பெட்ரோல், இரும்பு, உருக்குக் கட்டிகள் போன்ற சில பொருள்கள் சம்பந்தமாக இந்திய சர்க்கார் ஒரு விரிவான மசோதாவை, மக்கள் சபையின் இக்கூட்டத் தொடரிலேயே கொண்டுவருவார்களென எதிர்பார்க்கப்படுகிறதாம்; அவ்வாறு இயலாவிடில், ஓர் அவசரச் சட்டம் கொண்டுவரப்படலாமெனவும் கருதப்படுகிறதாம்.

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரத்தின் மீது விற்பனை வரி விதிப்பதையொட்டிய பிரச்சினையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைச் சீரமைப்பதாகவே இம்மசோதா இருக்கக்கூடுமாம்.

செப்டம்பர் 17–23: நாட்டுப் பிரிவினை வாரம்

கழகச் செய்திகள்

சென்னை- திருவொற்றியூர் தி. மு. க. பொதுக்கூட்டம்

5—9—55 மாலை 6-45 மணிக்கு திருவொற்றியூரில், தோழர் வை. பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், முகவை ஆர். எஸ். பாண்டியன், கண்ணதாசன் ஆகியோர் சமுதாய, பொருளாதார, அரசியல் விடுதலை குறித்தும், திராவிடநாடு வடவர் பிடியிலிருந்து விடுபட வேண்டிய அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—43-வது வட்ட தி. மு. கழகம்

1—9—55 இரவு நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், தோழர் எம். எஸ். முகம்மது முகைதீன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கோவா விடுதலைப் போரில் உயிர் துறந்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தியும், போர்ச்சுகீசிய சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், இந்தியப் பேரரசு இது பற்றி தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், கடந்த மூன்று மாத வரவு-செலவு கணக்குகளும் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டது. மற்றும் 'திராவிட நாடு பிரிவினை வாரம்' சம்பந்தமாகவும், கழக நூல் நிலையம் சம்பந்தமாகவும் சில முடிவுகள் செய்யப்பட்டன.

கோபியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

2—9—55 மாலை 7 மணிக்கு பெரியார் திடலில், நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் பி. எ சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் வி. சண்முகநாதன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் திராவிட நாடு பிரியவேண்டியதின் அவசியம் குறித்தும், தி. மு. கழக இலட்சியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

நொய்யல் தி. மு. கழகம்

7—9—55 மாலை 5 மணிக்கு நொய்யல் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர்கள் டி. பி. மூர்த்தி, வி. கே. ராசு ஆகியோரும் கலந்துகொண்டனர். திராவிட நாடு பிரிவினை வார விழாவில் நடைபெறவிருக்கும் சைக்கிள் ஊர்வலத்தில் கலந்துகொள்வது பற்றி முடிவெடுக்கப்பட்டது.

தவுட்டுப்பாளையத்தில் 11 கிளைக் கழகங்களின் கூட்டுக் கூட்டம்

நொய்யல் முதல் நன்னியூர் வரையிலுள்ள 11 தி. மு. கழகக் கிளைகளின் கூட்டுக் கூட்டம், 3—9—55ல் தோழர் க. பழனிச்சாமி தலைமையில், தவுட்டுப்பாளையம் கிராம முன்னேற்ற சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் 60-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். திராவிட நாடு பிரிவினை வார விழாவைக் கொண்டாடுவதெனவும், அன்று நொய்யலிலிருந்து நன்னியூர் வரை ஒரு மாபெரும் சைக்கிள் ஊர்வலமும், வழி நெடுக கொடியேற்றுதலும், புதூரில் கிளைக் கழகத் துவக்க விழாவும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. முன்னர், கூட்டத்தின் நோக்கங் குறித்தும், கடமை குறித்தும் தோழர்கள் டி. பி. மூர்த்தி, வி. கே. ராசு, நாவரசன், டி. ஆர். முத்துசாமி ஆகியோர் பேசினர்.

'மாதவரம் பிர்க்கா தி. மு. கழக பிரச்சாரக் குழு

மாதவரம் பிர்க்கா தி. மு. கழக ஆலோசனைக் கூட்டம் 4—9—55 மாலை 3-30 மணிக்கு, தோழர் செயராசு இல்லத்தில், தோழர் எ. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது மாதவரம் பிர்க்கா, பொன்னேரித் தாலுகாவில் இணைந்திருப்பதால், பொன்னேரி தொகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று கழகக் கொள்கையைப் பரப்ப வேண்டுமென்று முடிவு செய்து அதற்காகச் செயலாளர் உள்ளடங்கிய மூன்று பேரைக்கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், பொன்னேரி தாலுகாவிலுள்ள தி. மு. கழகக் கிளைகள் இந்தக் குழுவோடு இணையவேண்டுமென்றும், ஒவ்வொரு கிளையும் செயலாளர் உள்ளடங்கிய மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து இக்குழுவிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டும், இதனையே அழைப்பாகக் கொண்டு பொன்னேரி தாலுகாவிலுள்ள கிளைகள் இந்தக் குழுவில் கலந்துகொண்டு பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆவணத் தான்கோட்டை தி. மு. க. பொதுக்கூட்டம்

5—9—55 மாலை 6 மணிக்கு அழகிரி திடலில், தி. மு. கழகச் சார்பில் தோழர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், தோழர்கள் என். எஸ் இளங்கோ, அடைக்கலம், எஸ் இராமசாமி, கலாநேசன் ஆகியோர் 'தற்கால அரசியலும், சமுதாய நிலையும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

மேலப்பாளையம் தி. மு. க.

2—9—55ல், தோழர் தெ. ந ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கோவா அடக்குமுறையைக் கண்டித்தும், திராவிட நாடு பிரிவினை வாரத்தை சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முகவூர் தி. மு. கழகம்

2—9—55-ல், முகவூர் தி. மு. கழகக் கிளை செயற் குழுக் கூட்டம் தோழர் இ தமிழ்மணி தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவுக் கணக்கு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், தோழர்கள். மு. மாரியப்பன், பொ நாராயணன் ஆகியோரின் விலகல் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் எஸ். அண்ணாமலை, எஸ். கணபதியப்பன் ஆகியோர் முறையே செயலாளராகவும், துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ராப்ராய் தி. மு. கழகம்

3—9—55-ல், ராப்ராய் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். தங்கவேல் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் வ. க. கணபதி, புரட்சிமணி ஆகியோர் பேசிய பின், இத்திங்கள் 17-ந் தேதி ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பம்பாய்—அந்தேரி தி. மு. கழகம்

29—8—55 மாலை 6 மணியளவில், கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் எல். எம். பாண்டியன் கூட்டத்தைத் துவக்கிவைத்து, சென்ற ஜனவரி திங்கள் முதல் ஜூன் முடிய உள்ள வரவு-செலவு கணக்குகளையும், போக்குவரத்துக்களையும் வாசித்துக் காண்பித்தார். பின்னர் தோழர்கள் எஸ். முத்து, இரா. தஞ்சைத்துரை, எஸ். கணேசன் ஆகியோர் கோவா படுகொலை குறித்தும், கழக வளர்ச்சி குறித்தும் பேசினர். பின்னர் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் இராசீபுரம் வருகை

11—9—55 காலை 9 மணிக்கு, இராசீபுரம் தி. மு. கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக, ரங்க விலாஸ் தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் பேசுவர்.

மாலை 3 மணிக்கு, இராசீபுரம் நகராட்சி மன்றம், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும்.

மாலை 6 மணிக்கு, இராசீபுரம் புதுச்சந்தைப்பேட்டையில், தோழர் பி. ராமலிங்கம் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு-பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

* * *

பாலக்கோடு வருகை

12—9—55 மாலை 6 மணிக்கு, பாலக்கோடு, பெத்தம்பட்டி. தி. மு. கழகக் கிளைகளின் சார்பில், பாலக்கோடு ஸ்தூபி மைதானத்தில், தோழர் பி.எம். குப்புசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

ஓராண்டில் இந்தியா திரும்பியவர்கள்

புதுடில்லி, செப். 8—

"1954—55ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பிய இந்தியர்களின் எண்ணிக்கை 415" என்று பண்டித நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆப்கனிஸ்தான், ஆஸ்திரேலியா பெல்ஜியன் காங்கோ, பெல்ஜியம், பிரிட்டிஷ் கயானா, பர்மா, இலங்கை, சைனா, பிரான்ஸ், ஹாங்காங், ஈராக், கென்யா காலனி, மலேயா, பாகிஸ்தான், சவூதிஅரேபியா, சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

328 பேர்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்காக, இந்திய சர்க்கார் ரூ. 25,335 செலவிட்டதாகவும் பண்டித நேரு கூறினார்.

கண்ணாடி வளையல்கள் பயிற்சி நிலையம்

விசாகபட்டினம், செப். 5—

கண்ணாடி வளையல் உற்பத்திக்கான பயிற்சி நிலையம் ஒன்றை ஆந்திர சர்க்கார், சிம்ஹாசலம் எனும் இடத்தில் துவக்கி இருக்கின்றனர். விசாகை மாவட்ட அதிகாரி பயிற்சி நிலையத்தைத் துவக்கிவைத்திருக்கிறார்.

சென்னை மாநிலத்திலா அலுமினிய தொழிற்சாலை?

கூட்டுமுயற்சி பற்றி சர்க்கார் யோசிக்கிறதாம்!

சென்னை, செப். 8—

சென்னை மாநிலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நடத்துவதற்காகத் தனிப்பட்டவர்கள், அரசாங்கம் ஆகியோரின் கூட்டுமுயற்சியில் ஒரு 'நிறுவனம்' அமைப்பது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

இதுபற்றி தான் டில்லியில் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத் துறையிலேயே அலுமினியத் தொழிற்சாலையை அமைப்பதற்கு மத்திய சர்க்காரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் சிறிது காலம் பிடிக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

சேலத்தில் கிடைக்கும் 'பாக்சைட்' (அலுமினியக் கனிப் பொருள்) மிக்க உயர்ந்த ரகம் என்றும், அலுமினியத் தொழிலை அங்கு வெற்றிகரமாக நடத்த முடியுமென்று நிபுணர்கள் கருத்தறிவித்திருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இப்போது தேவையானதெல்லாம் நிதி வசதிதான் என்றும் இம்முயற்சியில் தனிப்பட்டோர் துறையின் ஒத்துழைப்பு இருந்தால் விரைவில் தொழிற்சாலை உருவாகுவது உறுதியானதுதான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கேட்டீர்களா 'கதை'யை?

வாழ்க்கைச் செலவுகள் ரஷ்யாவில் அதிகமாக இருக்கிறதாம்!

ஒரு கோப்பை தேநீரின் விலை ரூ. 1—4—0 ஆகிறதாம்.

காலைச் சிற்றுண்டிக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரையிலும், இடைவேளைச் சிற்றுண்டிக்கு ரூ. 25-ம், உணவுக்கு ரூ 35-ம் செலவாகிறதாம்.

உணவுகள் இல்லாமல் ஓட்டலில் தங்குவதற்கு மட்டும் ரூ 60 முதல் ரூ. 70 வரையில் வாங்குகின்றனராம்; உணவும் உட்கொள்வதாயிருப்பின் ரூ. 180 முதல் ரூ. 190 வரை ஆகுமாம்!

ஒரு ஜோடி பாதரட்சை ரூ. 100 முதல் ரூ. 200 வரை விற்கப்படுகிறதாம்.

ஒரு வானொலிப் பெட்டியின் விலை ரூ. 2,000 முதல் ரூ. 5,000 வரை விற்கப்படுகிறதாம்.

ரஷ்யாவில் உயர்ந்த சம்பள விகிதம் 50,000 ரூபிள் (ரஷ்ய நாணயம்) களாம்; அதில், 10,000 ரூபிள்கள் வருமான வரியாகக் கழித்துக் கொள்ளப்படுமாம்.

நுட்பப் பயிற்சி இல்லாத தொழிலாளருக்கு மாதம் 500 ரூபிள்களும், டாக்டர்களுக்கு 800 முதல் 5,000 ரூபிள்களும், சுகாதார மந்திரிக்கு 1,000 ரூபிள்களும் வருமானமாகக் கிடைக்கிறதாம்;

வாழ்க்கைச் செலவு அதிகமாயிருந்தாலும், ஒவ்வொருவருக்கும் வரி வேறு விதிக்கப்படுகிறதாம்; என்றாலும், எல்லோருக்கும் இலவச மருத்துவ சிகிச்சை, 16 வயது வரை இலவசப் படிப்பு ஆகிய சலுகைகளை சர்க்கார் வழங்குகின்றனராம்.

குடியிருப்பு வாடகை மிகக் குறைவுதானாம்; குடும்பத்தின் 'அளவுக்குத் தகுந்தாற்போல் வீடும் கொடுக்கப்படுகிறதாம்!

இவ்விவரங்களை, சமீபத்தில், ரஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பிய ஐதராபாத்தின் சுகாதார இலாகா டைரக்டர் டாக்டர் கத்ரி என்பவர், 'ரோட்டரி கிளப்'பில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பவானி சாகர் தரும் பலன்!

ஈரோடு, செப். 7—

பவானி சாகர் அணையிலிருந்து கீழ்பவானி பிரதேசத்திற்கு, வரும் செப். 15-ந் தேதி முதல் நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்படும் என்று தெரிகிறது.

கடந்த ஆண்டு, ஈரோடு வட்டத்தில் 32,000 ஏகர், தாராபுரம் வட்டத்தில் 76,000 ஏகர் நிலப்பரபுக்கு தண்ணீர் விடப்பட்டது.

இந்த ஆண்டு, அதற்கும் மேலாக, ஈரோடு வட்டத்தில் 86,000 ஏகர், தாராபுரம் வட்டத்தில் 10,400 ஏகர், பவானி வட்டத்தில் 2,000 ஏகர், கரூர் வட்டத்தில் 3,800 ஏகர் ஆகிய நிலப்பரப்புக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும் என்று தெரிகிறது.

பவானி சாகர் அணை நீரினால் இந்த ஆண்டு சுமார் 52,890 ஏகருக்கு அதிகமான நீர்ப்பாசன வசதி தரலாம் என்று நம்பப்படுகிறது.

உங்கள் குறிப்புக்கு!

புதுடில்லி, செப். 7—

1954—55 நிதி ஆண்டு ஆரம்பத்தில் வருமான வரி பாக்கித் தொகை ரூ. 169.6 கோடியாக இருந்தது என்றும், அவ்வருட இறுதியில் அது ரூ 176.5 கோடியாக ஆகிவிட்டது என்றும் ராஜ்யங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

செய்திச் சுருள்

சொற்பயிற்சிக் கூட்டம்

4—9—55ல், சென்னை அமுதி நினைவு மன்றச் சார்பில், காலை 11 மணியளவில் தோழர் அ. சித்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில் 'ஏன் இந்தியை எதிர்க்கிறோம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் அ. வ. பாண்டியன், த. தினதயாளன், இரா. சேரன், ப. கருமுகில் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருமணம்

4—9—55ல், மதுரை ஆழ்வார் புரத்தில், திரு. அ. கி. பரந்தாமனார் தலைமையில் தோழர் எஸ். சந்தானம்—தோழியர் ஜெயலட்சுமி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். முத்து, இராசாமணி, கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

பெயர்சூட்டு விழா

சேலம் மாவட்ட தி. மு. கழகக் குழு உறுப்பினர் தோழர் எஸ். நாராயணசாமி அவர்களின் ஆண் மகவுக்கு 4—9—55ல், தோழர் கே. கந்தையா தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றபோது, குழந்தைக்கு 'மதியழகன்' என்று பெயர் சூட்டப்பட்டது.

அனுதாபம்

3—9—55ல், சென்னை-திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகச் செயலாளர் தோழர் சண்பகவேல் அவர்களின் சகோதரர் தோழர் சண்முகன் இயற்கை எய்தியமை குறித்துப் படிப்பகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தி.மு.க. ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீர்

‘குறைத்து மதிப்பிட்டு மகிழுவோர் பற்றி கவலை வேண்டாம்’

‘நம்மைக் குறைத்து மதிப்பிடுவோர் மகிழ்ந்திருக்கட்டும்!

‘பிரிவினை இலட்சியம் எப்படி குறுகிய நோக்கமாகும்!’

மயிலையில் பொதுச்செயலாளர் முழக்கம்

★

“நம்மை ஒரு காலத்தில் அலட்சியப்படுத்தியவர்கள் எல்லாம் இன்று நம்மைப்பற்றிக் கவலை கொண்டிருக்கிறார்கள்—நமது வளர்ச்சி கண்டு பொறாமைப்படுகிறார்கள் ;

“நம்மை ஒரு காலத்தில் குறைத்து மதிப்பிட்டுவந்த ஆட்சியாளர்கள் இன்று நாட்டில் நடைபெறும் சம்பவங்களுக்கு—அவர்களது திட்டங்களுக்கு நாம் என்ன கருத்தறிவிக்கிறோம்—அவர்களது திட்டங்களையும், போக்கினையும் நாம் எதிர்க்கிறோமா—ஆதரிக்கிறோமா என்று அறிந்துகொள்ள முற்பட்டிருக்கிறார்கள் என்பதுடன் ‘நாம் எதிர்ப்போமோ’ என்ற அச்சத்துடன்தான் தங்கள் திட்டம்பற்றிப் பேசுபவர்களாயிருக்கிறார்கள் ; என்றாலும் இன்னும் சிலர், நமது வளர்ச்சியை—ஆற்றலைக் குறைத்து மதிப்பிட்டுக்கொண்டிருக்கலாம் ; நம்மைப் பற்றிய செய்திகளே வெளியிடாமல் இருட்டடிப்பு செய்யலாம் ; ஆனாலும், நாம் அதுபற்றிக் கவலைப்படத் தேவையில்லை ; தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை நாம் வளர்ந்திருக்கிறோமா—ஆண்டுதோறும் நமது வளர்ச்சி எவ்வளவு என்பதைத்தான் நாம் கவலையோடு கணக்கிட வேண்டும் ;

“புரட்சித் தீயிலே தன்னைப் பொசுக்கப்போகிறார்கள்—என்பதைத் தெரிந்துகொள்ளாத பிரான்ஸ் நாட்டு 14-ம் லூயி, அந்த நாட்டில் வளர்ந்த புரட்சிப் பட்டாளத்தைக் குறைத்துத்தான் மதிப்பிட்டிருந்தான் ;

“ரஷ்ய நாட்டு சார் மன்னன்கூட பொது உடைமை வாதிகளைக் குறைத்துத்தான் மதிப்பிட்டிருந்தான் ;

“15 ஆண்டுகளுக்கு முன்னால், சீன நாட்டு சியாங்-கே-ஷேக் அந்த நாட்டில் வளர்ந்துவந்த ஆற்றல்மிகு புரட்சிப் பட்டாளத்தைக் குறைத்துத்தான் மதிப்பிட்டிருந்தான் ;

“ஆனால், அவர்கள் எல்லாம், எதிர்காலத்தில் என்ன விளைவுகளை அனுபவித்தார்கள் என்பதற்கு வரலாறுகள் இருக்கின்றன.

“அதுபோல, இந்த நாட்டில் மாபெரும் மக்கள் சக்தியாக வளர்ந்து வரும் நம்மை, இந்த நாட்டு ஆட்சியாளர்களும், இன்னபிறரும் குறைத்து மதிப்பிட்டு, அதனால் கிடைக்கும் மகிழ்ச்சியிலே மூழ்கித் திளைத்திருக்கட்டும்—நமக்குக் கவலை இல்லை ;

“நாம், நமது இலட்சியம், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்—என்று கூறும்போது, ‘அது குறுகிய நோக்கம்,’ என்று சிலர் கூறமுற்படுகின்றனர் ;

“கடந்த 15 ஆண்டுகால உலக வரலாற்றை அவர்கள் உற்றுநோக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

“கடந்த 15 ஆண்டுகளில், எந்த இரு நாடுகளாவது, தன்னிச்சையாக விரும்பி, எல்லைக் கோடுகளை அழித்துவிட்டு ஒன்று சேர்ந்திருப்பதாக ஒரு உதாரணம் காட்ட முடியுமா ?

“உலகம் ஒன்றாகிக் கொண்டிருக்கிறது—என்று பேசுகிற நண்பர்கள், உலகத்தில் எங்கேனும் ஒரு மூலையில், அப்படி ஒரு இணைப்பு ஏற்பட்டதாகக் காட்டுவார்களா ?

“நான், உலகத்தில் ஏற்கனவே இருந்த நாடுகளுக்கான எல்லைக் கோடுகளை மேலும் அதிகமாக்குகிற ஒரு நாடு, இரண்டு நாடாகப் பிரிந்திருப்பதற்கு உதாரணம் தருகிறேன் ;

“இஸ்ரேலிலிருந்து பாலஸ்தீன் தனியாகப் பிரிந்திருக்கிறது ; இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து தனியாகப் பிரிந்தது ; இந்தியாவிலிருந்து பர்மா பிரிந்தது—பாகிஸ்தான் பிரிந்தது ; கொரியா இரண்டு துண்டுகளாக்கப்பட்டிருக்கிறது ; வியட்நாம் இரண்டு கூறுகளாக்கப்பட்டிருக்கிறது ;

“இவை எல்லாம், ‘உலகம் ஒன்றாக வேண்டும்,’ என்று கூறப்படுகிற நேரத்திலேயே நடைபெற்றிருக்கிற பிரிவினைகளுக்கான சம்பவங்களாக நாம் காட்டும் உதாரணங்கள் ;

“ஒரு உதாரணம் தரமுடியுமா—‘இரு நாடுகள் ஒன்றாகச் சேர்ந்தன’ என்பதற்கு ? யுத்தத்தில் இட்லர் பல நாடுகளை ஒன்றாக இணைத்திருக்கலாம் ; ஆனால், தன்னிச்சையாக, நாடுகள் தனியாகப் பிரிந்திருப்பதைப்போல, விருப்பமுடன் எந்த இரண்டு நாடுகள் ஒன்றாயின ? காட்டுவார்களா—உதாரணம் ?

“உலகம் ஒன்றாக வேண்டும்—என்கிறார்கள் ; எங்கே ஆயிற்று ஒன்றாக ? முன்பிருந்ததைக் காட்டிலும் இப்போது உலகத் தொடர்பு, உறவு, நட்பு அதிகமாகியிருக்கிறது—உலக நாடுகளிடையே ; அவ்வளவே தவிர ஒன்றாகிவிட்டதா ?

“அந்த நிலையில், ‘திராவிடநாடு திராவிடர்களின் நலன்களுக்காகத் தனிநாடாக வேண்டும்’—என்பது, எந்தவகையாலே உலகத் தொடர்பை—உலக உறவை முறித்துவிடப்போகிறது ? எடுத்துக் காட்ட முடியுமா காரணங்களை ?”

—என்று பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை, மயிலை தி. மு. கழக ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சி

9—9—55 மாலை 6-30 மணியளவில், சென்னை 44-வது வட்டம் மயிலாப்பூர் தி. மு. கழக 6-வது ஆண்டு விழா கோபதி நாராயணசாமி செட்டி தெரு திடலில் நடைபெற்றது.

கழகச் செயலாளர் எல்லோரையும் வரவேற்றார்.

கூட்டத்திற்கு தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் தலைமையேற்று, நிகழ்கால அரசியல் நிலை குறித்தும், கழகக் கொள்கைகள், இலட்சியம் குறித்தும் பேசினார்.

அடுத்து தோழர் எச். வி. சீனிவாசன் இயக்கப் பாடல்கள் பாடினார்.

பின்னர், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் கழகத்தின் ஆறாண்டுகால வளர்ச்சி குறித்தும் பணிகள் குறித்தும் விளக்கவுரை ஆற்றினார்.

செயலாளரால் இரண்டு அனுதாபத் தீர்மானங்கள் படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பலத்த ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து நீண்டதோர் கருத்துரை நிகழ்த்தினார்

மாநில மாநாட்டு நிதிக்காக ரூ 67–7–0, மாவட்டக் கழகப் பொருளாளர் வசம் தரப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது. (ர-சி)

சிதம்பரம் வட்டக் குழு அவசரக் கூட்டம்

15—9—55 மாலை 4 மணிக்கு, சிதம்பரம் வட்டம், லால்பேட்டை தி. மு. கழகத்தில் சிதம்பரம் வட்டக் குழு உறுப்பினர்களின் அவசரக் கூட்டம் நடைபெறும். கழகத்தின் முக்கியப் பிரச்சினைகள் சில குறித்து ஆராயப்படும். அக்கூட்டத்தில் கலந்துகொள்ளவரும் கிளைக் கழகச் செயலாளர்கள் மாநில மாநாட்டிற்கான தங்கள் தங்கள் பங்குத் தொகையை உடன் கொண்டுவரும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கழகக் கூட்டம்

★

சென்னை
(கோமளீஸ்வரன்பேட்டை)
நாகப்ப முதலி தெருவில்
(சித்ரா டாக்கீஸ் பின்புறம்)

11—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : அந்தோனி எப். மாறன்

பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
கே. ஆர். இராமசாமி
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
எம். எஸ். அப்துல் காதர்

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

காட்டுப்பாடி (வ.ஆ.)

வருகை

பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு, காட்டுப்பாடி (வ. ஆ. மாவட்டம்) பஞ்சாயத்து போர்டு சார்பில், மாலை 5 மணிக்கு வரவேற்பளிக்கப்படும்.

மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் கிருட்டினராஜ் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

(தேதி குறிப்பிடப்படவில்லை)

சிதம்பரம் வட்ட தி. மு. க. கிளைக் கழகத் தோழர்கட்கு

‘மாநில மாநாட்டு நிதிப் பங்குத் தொகையை இதுவரையிலும் அனுப்பித்தராத கிளைக் கழகங்கள் உடனடியாகத் தங்கள் பங்கினைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் ;

“நமது வட்டக் கழகத்தின் சார்பில், ‘திராவிட நாடு பிரிவினை’ விழா கொண்டாடவேண்டியிருப்பதால் அதற்குத் தலா ரூ. 2-ம் சேர்த்து, ஆகமொத்தம் ரூ. 14-ம் அவசியம் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்,”

என்று, சிதம்பரம் வட்டக் குழுத் துணைச் செயலாளர் தோழர் ஏ இ இராமகிருட்டிணன் கேட்டுக்கொள்கிறார்.

திருமணங்கள்

★

11—9—55 காலை 8½ மணிக்கு, திருவொற்றியூரில் (சேக்காடு), தோழர் பெ. சுப்பிரமணியன்—தோழியர் இரஞ்சிதம்மாள் திருமணம், தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் நடைபெறும் தோழர் ஜி முத்துகிருஷ்ணன், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

ஃ ஃ ஃ

11—9—55 காலை 8½ மணிக்கு, திருவொற்றியூரில், தோழர் க. மு. இராமச்சந்திரன்—தோழியர் புஷ்பாவதி திருமணம், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெறும். தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

ஃ ஃ ஃ

11—9—55 காலை 7 மணிக்கு, சென்னை-பெரம்பூர் பாரக்ஸ், நியூ போன்ஸ் ரோட் (சரஸ்வதி டாக்கீஸ் பின்புறம்) 6/14-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் எம். மயில்வேல்—தோழியர் எம். ராணி திருமணம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆர். டி. அரசு, சி. ப. தம்பிதுரை, டி. எஸ். சண்முகம், கதிர் டி. சுப்பிரமணி, மாசிலாமணி ஆகியோர் பேசுவர்.

ஃ ஃ ஃ

11—9—55 காலை 9 மணிக்கு, சென்னை-சூளை பட்டாளம், ஸ்ரீபிரகாசாநகர் பழைய பென்ஷன் லைன், எண் 2 எம். பிளாக், 8-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் எம். வரதராசன்-தோழியர் டி. மாணிக்கவாசகி திருமணம், தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மாணிக்கம், கதிர் டி. சுப்ரமணி, கோ. இளவரசு ஆகியோர் பேசுவர்.

ஃ ஃ ஃ

12—9—55 காலை 9 மணிக்கு, சென்னை, புரசைபாக்கம் நெடுஞ்சாலை (ஹைரோடு), 54-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் க. திருமாறன்—தோழியர் பத்மா திருமணம், தோழர் சி. என். அண்ணாதுரை தலைமையில் நடைபெறும்.

* * *

12—9—55 காலை 6 மணிக்கு, சென்னை-ஏழுகிணறு, எண் 41, சடையப்ப மேஸ்திரி தெருவில், தோழர் ஜி. இரங்கநாதன்—தோழியர் இந்திராணி திருமணம், தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. முனுசாமி, வி. சீ தமிழ்தாசன் ஆகியோர் பேசுவர்.

* * *

12—9—55 காலை 8¾ மணிக்கு, ஆத்தூர் வட்டம், பைத்தூர் கர்ணம் வீதியிலுள்ள தோழர் அ. சின்னசாமி இல்லத்தில், தோழர் மதியழகன்—தோழியர் இசைமொழி திருமணம், திரு. தி. ச. முனுசாமி தலைமையில் நடைபெறும்

* * *

12—9—55 காலை 9½ மணிக்கு, திருச்சி, பீமநகர், பஞ்சகிடங்குத் தெரு, மணமகன் இல்லத்தில், தோழியர் சகுந்தலை—தோழர் த. சொக்கலிங்கம் திருமணம் நடைபெறும்.

* * *

12—9—55 காலை 9½ மணிக்கு, சென்னை-கோடம்பாக்கம், எண் 10, பிள்ளையார் கோயில் வீதியிலுள்ள அப்புக்குட்டி சத்திரத்தில், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ., தலைமையில், தோழர் சமாசம்—தோழியர் தேவிகாராணி திருமணம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

330 டாக்டர்கள் வேலை நிறுத்தம்

நகரசபையின் ‘அநியாய’ப் போக்கை எதிர்த்து நடவடிக்கை

அகமதாபாத், செப். 9—

நகரசபை நடத்துகிற வதிலால் சாராபாய் மருத்துவ மனையின் நிர்வாகக் குழு, அந்த மனையில் வேலை செய்யும் கௌரவ மருத்துவர்களிடம் நியாயமற்ற—நேர்மையற்ற முறையில் நடந்துகொண்டதைக் கண்டிப்பதற்காக நகரில் உள்ள சுமார் 330 ‘டாக்டர்’களும் வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்தியாவிலேயே இப்படி டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்வது இதுவே முதல் முறை. இந்த வேலைநிறுத்தத்தை அகமதாபாத் மருத்துவ சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

அந்த சங்கம்தான், நகரசபை மருத்துவக் கழகத்திற்கும்—கௌரவ ‘டாக்டர்’களுக்குமிடையே எழுந்துள்ள தகராறைத் தீர்த்து வைக்கும் பொறுப்பேற்றிருக்கிறது

அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய நோயாளிகளை, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தாலும் ‘டாக்டர்’கள் கவனிக்க முற்படுவர்.

வதிலால் சாராபாய் மருத்துவ மனையைச்சேர்ந்த 15 கௌரவ ‘டாக்டர்’களும், தங்களுக்குக் கௌரவச் சம்பளம் வேண்டும்—தங்கள் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும்—மருத்துவ மனையில் உள்ள தனி அறையில் இடம் பெறுவதற்காக நோயாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் பணத்தில் பங்கு வேண்டும்—என்பன போன்ற கோரிக்கைகளை நிர்வாகத்தினரிடம் தந்தனர். தங்கள் கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தாங்கள் தாக்கல் செய்துள்ள ‘நோட்டீசை’யே தங்களது விலகல் கடிதமாகக் கருதிக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தனர்.

நிர்வாகத்தினர் அவர்களது விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பதிலாக முழு நேர சம்பளம் தந்து வேலை செய்ய புதிய ‘டாக்டர்’களை நியமித்துக்கொள்ளப்போவதாக அறிவித்திருக்கின்றனராம் !

சென்னையில் சிறப்புக் கூட்டம்

மாநில மாநாட்டு நிதிக்கு ரூபாய் 1,022—1—6

4—9—55 அன்று சென்னை கோகலே மண்டபத்தில், மாநில மாநாட்டு நிதி சிறப்புக் கூட்டம் திரு. கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் மு. கருணாநிதி அவர்கள் உணர்ச்சி மிக்கதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மாநில மாநாட்டுக்கு ரூபாய் 1,022—1—6 நிதி கொடுக்கப் பெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.